[12th September 1958

THE HON. SRI V. RAMAIAH : பக்கத்திலுள்ள மாகாணத்தில் என்ன செய்கிறார்கள் என்று எனக்குச் சரியாகத் தெரியாது. இங்கேயுள்ள முறைகளைப் பற்றி அடிக்கடி பரிசீலனை நடத்தி வருகிறோம். இப்போது பெரிய டாக்ஸி யில் ஐந்து பேர்களை அனுமதித்திருக்கிறோம். பேபி டாக்ஸியிலும் நான்கு பேர்களை அனுமதிக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து கொள்ள லாம்.

SRI V. SANKARAN: மொபசல் பிரதேசங்களில் உள்ள டாக்ஸிகளில் மீட்டர்கள் இல்லாத காரணத்தால் விசேஷ காலங்களில் அவர்கள் அதிக பணம் கேட்கிறார்கள். மதுரை போன்ற இடங்களில் உள்ள டாக்ஸிகளிலும் மீட்டர்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put.

Irrigation

* 203-D *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா—நன்னிலம் தாலூகா—உபயவேதாந்தபுரம் பாச் சக்கால் வாய்க்கால் வெட்டிக் கொடுக்கவேண்டுமென தஞ்சை காவிரி டிவிஷன் எக்ஸிக்கூடிவ் இன்ஜினியர் அவர்களுக்கு மனு கிடைத்ததா ? எப்போது ?

(ஆ) அதன் மீது இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(இ) அதற்காக ஒதுக்கியுள்ள தொகை என்ன ?

(ஈ) அவ்வேலை எப்போது முடிவடையும் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடும் பாய்ச்சக்கால் நூலாற்றின் வலது கரையில் மைல் 82-6-ல் துவங்கும் பாலூர் பாய்ச்சக் காலாக இருக்கவேண்டும். ஏனென்றால் அந்த ஒரே பாய்ச்சக்கால்தான் உபயவேதாந்தபுரத்திற்கும் மற்றும் மூன்று கிராமங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுகிறது. அப்படியானால், அதைப்பற்றிய ஒரு மனு ஜூன் 1958-ல் கிடைத்தது.

(ஆ) அந்த வாய்க்காலை வெட்டிக் கொடுக்கும் வேலை ஜூன் 1958-ல் மேற்கொள்ளப்பட்டது.

(இ) ரூபாய் 2,200.

(ஈ) அது முடிவடைந்துவிட்டது.

SRI M. C. MUTHUKUMARASAMY : இந்த மாதிரி பாய்ச்சல் வாய்க்கால் களை அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்று உத்தரவு போடும்போது அதி காரிகள் அதை உடனே எடுத்து நடத்தப் பல தகராறுகளை எழுப்புகிறார்கள். முடியாது என்கிறார்கள். அந்த மாதிரி நிகழாதபடி துரிதமாக அவ் வேலையை எடுத்து நடத்த உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : வேலைகளைக் குறித்த நேரத்தில் செய்ய வேண்டுமென்பதுதான் கட்டளை. குறிப்பாக எவ்விடத்திலாவது அதிகாரி கள் தடங்கல் செய்வது பற்றிக் குறிப்பிட்டால் கவனிக்கப்படும்.

Rubber

* 203-E *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. Minister for Industries be pleased to state—

(*a*) the area under rubber plantation in the State;

(*b*) the quantity of rubber exported from this State during the last two years; and

(*c*) the amount of sales tax collected on rubber last year.

12th September 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 10,346 (ten thousand, three hundred and forty-six) acres up to end of 1956.

(*b*) There were no exports of raw rubber from the Madras State to foreign countries during the period April 1955 to October 1957. A total of 22,275 (twenty-two thousand two hundred and seventy-five) pounds of raw rubber were exported to other ports in India by coastal craft from the reorganized State of Madras during April to December 1957. Separate figures for Madras State are not available for the period prior to April 1957.

(*c*) A sum of Rs. 44,964 (rupees forty-four thousand, nine hundred and sixty-four) was collected by way of sales tax on rubber for the year 1957–58.

SRI T. T. DANIEL : In view of the fact that we require plantation rubber for internal use in our country, will the Government consider the desirability of having a new rubber plantation?

THE HON. SRI R. VENKATARAMAN : The question of having a new rubber plantation has been examined and no decision has yet been taken.

Bus fares

*203-F *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து ஆரணிக்கும் வேலூருக்கும் போகும் பஸ்களில் ஆற்காடு வரையில் வாங்குகின்ற பஸ் சார்ஜில் வித்தியாசம் உண்டா ?

(ஆ) அப்படியாயின், காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir. The difference is four annas per passenger.

(*b*) The buses on the Madras-Arni route charge Rs. 2 as fare to attract passengers. This is due to business competition.

SRI S. M. ANNAMALAI : இப்படி இந்த சார்ஜில் வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் ஜன நெருக்கடி ஜாஸ்தியாக இருக்கிறது என்பதாகவும், அதற்காக வேலூரில் இருந்து இரண்டு பஸ்களும், ஆரணியிலிருந்து இரண்டு பஸ்களும் தேவை என்று விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்களா ? அப்படியானால் சீக்கிரம் அதற்கு அனுமதி கொடுக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : விண்ணப்பம் வந்திருந்தால் அது எப்படிப் பரிசீலனைச் செய்யப்படவேண்டுமோ அப்படிப் பரிசீலனை செய்யப்படும். சீக்கிரம் அனுமதிக்கவேண்டும் என்றால் சட்டம் தான் குறுக்கே நிற்கும்.

Roads

* 203-G *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சாலையமைப்பு வேலையில் 1958-ம் ஆண்டில் கோயமுத்தூர் ஜில்லாவிலே அமர்த்தப்பட்டவர்களிலே—

(1) நிரந்தர வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பவர்கள்,

(2) தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் ஆகியோர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) ரோடு மேஸ்திரிகளாக எத்தனை பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் ?